**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.3 |
| Name | : | நேசமணி |
| Father's Name | | லாசர் |
| Village | : | திருமாந்துறை |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 75 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு 3வது தலைமுறையின் படி அ.சா.1 எனக்கு மருமகள் முறை ஆவார். நான் எதற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சம்பவம் எதிரி சக்திவேல் வீட்டு வாசலில் பிரச்சனை நடந்தது என்றால் சரியல்ல அ.சா.1 பிரேமாவின் வீட்டு வாசலில் தான் பிரச்சனை நடந்தது. இந்த வழக்கு இல்லாமல் வேறு ஏதேனும் வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்களா என்றால் இல்லை.

01.03.2021ம் தேதி காலை 10 மணிக்கு எதிரி தானாகவே பேசி கொண்டிருந்தார் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் அ.சா.1 பிரமோவிடம் நான் என்ன சொல்லிவிட்டு சென்றேன் என்றால் காலை 11 மணிக்கு

எதிரிகள் அவர்கள் வீட்டிலிருந்து கத்திக் கொண்டிருந்தார்கள். அ.சா.1 பிரேமா அவர்கள் வீட்டிலிருந்து கத்திக் கொண்டிந்த போது கத்த வேண்டாம் அவர்கள் கத்தினால் கத்திட்டு போகட்டும் என்று சொன்னேன்.

வழக்கு சம்பவ சமயத்தில் காலை 11 மணிக்கு அ.சா.1ன் வீட்டில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால்  கைக்குழந்தையுடனும் செல்வம்பாள் மற்றும் அ.சா.1 பிரேமா மட்டும் தான் வீட்டிலிருந்தார். பிரச்சனை ஏற்பட்ட பிறகு அ.சா.1 பிரேமாவை யார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் கூட்டத்தில் இருந்த யாரோ அ.சா.1 பிரேமாவின் மகன் பிரபாகரனுக்கு போன் செய்து சொன்னதால் அவர் வந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

எதிரி சக்திவேல் அருவாளை காட்டி என்றைக்கு இருந்தாலும் அ.சா1 பிரேமாவை வெட்டிவிடுவேன் என்று சொன்னதை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் நான் எந்த ஒரு பிரச்சனையும் நான் கண்ணால் பார்க்கவில்லை என்றாலும் புகார்தாரர் எனது உறவினர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.